2011 பிப்ரவரி 7]

18—

அங்கன்வாடி மையம்

***120758—திரு. செ. பொன்னுதுரை:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பட்டக்காரன்பாளையம் ஊராட்சி, நாடார்பெருமாம்பாளையத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, பட்டக்காரன்பாளையம் ஊராட்சி, நாடார்பெருமாம்பாளையத்தின் மக்கள்தொகை 164 ஆகும். மேற்படி பகுதியில் மத்திய அரசு குழந்தைகள் மையம் அமைக்க நிர்ணயித்துள்ள மக்கள்தொகைக்கும் குறைவான மக்கள்தொகை இருப்பதாலும், குழந்தைகள் குறு மையம் அமைக்கத் தேவையான குறைந்தபட்ச மக்கள்தொகையான 150 பேர்கூட மேற்படி கிராமத்தில் உள்ள போதிலும், குறு மையம் அமைக்கத் தேவையான 15 குழந்தைகள்கூட இக்கிராமத்தில் இல்லாததால், இக்கிராமத்தில் குழந்தைகள் குறு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.*

திரு. செ. பொன்னுதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதியில் உள்ள பட்டக்காரன்பாளையம் ஊராட்சி, நாடார்பெருமாம்பாளையத்தில் இருக்கும் குழந்தைகள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து அங்கே சுல்லிப்பாளையம் சென்று வருவதால், அந்தக் குழந்தைகளை அனுப்ப முடியாத சூழ்நிலை இருக்கிறது. நாடார்பெருமாம்பாளையத்தின் அருகில் உள்ள பெருமாம்பாளையம், மணியம்பாளையத்தையும் சேர்த்து அங்கு ஒரு குறு மையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையைத் தாண்டி குழந்தைகளை அனுப்ப முடியாத நிலை இருப்பதை எடுத்துக் கூறினார்கள். ஆகவே, மேற்படி உறுப்பினர் கூறுவதைப்போல, 2, 3 கிராமங்களை இணைத்து அந்தப் பகுதியில் குறு மையம் அமைக்க அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை ஒன்றியத்திலுள்ள 150 அங்கன்வாடி மையங்களில் 91 மையங்கள் சொந்தக் கட்டடம் இல்லாமல் அங்கே திண்ணையிலே அமர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளின் நலன் கருதி, அங்கன்வாடிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும். அதேபோல, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 110 அங்கன்வாடி மையங்களிலே 53 அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடம் தேவைப்படுவதால், அந்தக் குழந்தைச் செல்வங்கள் படிப்பதற்குக் கட்டடம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, இந்த அங்கன்வாடி மையங்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்படி, நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களுடைய துறையின்மூலம் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும், உள்ளாட்சி மன்ற நிதியிலிருந்தும் படிப்படியாகக் கட்டப்பட்டு வருகிறது. இதுவரையிலும் 3,200 கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல; இன்னும் 19 ஆயிரம் அங்கன்வாடி மையங்களுக்கு நிரந்தர கட்டடம் இல்லாமல் இருப்பதைக் கணக்கெடுத்து, படிப்படியாகத் துறையின்மூலம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, பெருந்துறை

2011 பிப்ரவரி 7]

வட்டாரத்தில் உள்ள, பெருந்துறை தொகுதியிலுள்ள மேற்படி மையங்களுக்கும் எதிர்வரும் காலத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

மீன் அங்காடி

***120761—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அச்சரப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சியில் குளிர்சாதன வசதியுடன் மீன் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீனவ சமுதாயத்தினுடைய தலைவர் சிந்தனைச் சிற்பி திரு. மா. சிங்காரவேலர் அவர்களுடைய பெயரில் தமிழகத்தின் வரலாற்று முதல்வர் அய்யா மாண்புமிகு கலைஞர் அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சியரின் மாளிகைக்குச் சிந்தனைச் சிற்பி திரு. மா. சிங்காரவேலர் அவர்களின் பெயரைச் சூட்டியும், மாளிகையின் எதிரே அவருடைய திருவுருவச் சிலையை அமைத்தும், மீனவ மக்களுக்கும், சிந்தனைச் சிற்பி திரு. மா. சிங்காரவேலருக்கும் பெரும் புகழைச் சேர்த்தார்கள்.

இன்று, நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் அய்யா மாண்புமிகு கலைஞர் அவர்கள், மீனவ சமுதாயத்தினுடைய தலைவர் சிந்தனைச் சிற்பி திரு. மா. சிங்காரவேலர் அவர்களுடைய பிறந்த நாளை அரசு விழாவாக ஆண்டாண்டுக்காலம் கொண்டாடுவதாக (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்து, மீனவ

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS